விவரம். அந்த மாவட்டத்திற்குக் கடலை உலர வைக்கும் கருவி அமைக்க அரசு மேலும் பரிசீலிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அதிகமாக நிலக் கடலை விளைகிற மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம் என்று அந்த மாவட்ட உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். கோவை மாவட்டத்திலேயும் அதிக மாக உற்பத்தி செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, அப்படி தற்சமயம் எதுவுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, in view of the unhappy experience in Thanjavur district where such dryers which were installed for drying paddy were not utilised, will the Government consider the desirability of not putting up dryers in any district?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அப்படி ஒன்றும் வரவில்லை. அப்படி வருமானால், அதைப்பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

Banana Cultivation.

* 39. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Department of Horticulture of the Coimbatore Agricultural University has entered into collaboration with the Indian Council of Agricultural Research for Banana cultivation; and

(*b*) if so, the details thereof?

வாழைச் சாகுபடி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் தோட்டக் கலைத் துறை, வாழைச் சாகுபடிக்காக, வேளாண்மை ஆராய்ச்சி இந்தியக் கழகத்துடன் உடனுழைப்பு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) மத்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம், நான்காவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழ் அனைத்திந்திய ஒருங்கிணைக்கப்பட்ட பழ அபிவிருத்தித் திட்டம் ஒன்றை நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு பாகங்களில் ஆரம்

பித்திருக்கிறது. அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு இடமும், முக்கிய பழப்பயிர்கள் வளரக்கூடிய இடமாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. வாழை, பப்பாளி, திராட்சை ஆகிய பழங்கள் பயிரிடுவதற்கு சிறந்த இடமாக தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் கோவையில் 1--6--1971-ல் ஆரம்பித்ததின் காரணமாக, இந்தத் திட்டம் தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இப்படிப் பயிரிடப்படுகிற வாழை எந்தெந்த நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது என்ற செய்தியை அமைச்சரவர்கள் சொல்ல முடியுமாவென்று அறிய விரும்புகிறேன். பி.ப. 4–20

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தனியாகக் கேள்வி போடவும். ஏனென்றால், இப்போது இதிலே கேட்கப்பட்டிருப்பது, இங்கிருந்து எப்படி ஏற்றுமதி செய்யப்படுகிறது என்பதுதான். எனவே, தனியாகக் கேள்வி போடுவார்களானால், அதைப்பற்றி விளக்கமாகச் சொல்கிறேன்.

THIRU A. R. DAMODARAN : Sir, is there any proposal to use bananas for the manufacture of banana wine which, I believe, is very popular in the West Indies?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, வாழைப் பழத்தின் மூலமாக ஒயின் உற்பத்தி செய்வதில்லை. ஆனால் திராட்சையின் மூலமாகச் செய்வதற்கு இப்போது திட்டம் இருக்கிறது.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, பொப்பளிக் காய் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தப் பழத்தை உற்பத்தி செய்கிறார்களே, அதை மக்கள் வாங்குகிறார்களா? அந்தப் பழம் மிக மலிவாகக் கிடைக்கிற காரணத்தினால், அதை எந்த வகையில் பயன்படுத்துகிறார்கள்? இந்தப் பொப்பளிக் காயை வெளி நாட்டிற்கு ஏற்றுமதி செய்து, அதன் வாயிலாக நமக்குப் பணம் கிடைக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, பொப்பளி அல்ல, பப்பாளிப் பழம் உற்பத்தி செய்கிற திட்டம் இருக்கிறது. பொப்பளி பற்றி விளம்பரம் செய்து அங்கத்தினர் அவர்கள் தெரிவிப்பார்களானால், அதைப்பற்றிக் கவனிக்கப்படும்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, இப்படி ஆராய்ச்சி செய்வதற்காக 4 இடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். எந்த 4 இடங்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, வாழையில் தமிழ் நாட்டில் மத்திய வாழை ஆராய்ச்சி நிலையம் ஆடுதுறை, தஞ்சை மாவட்டத்திலும், தோட்டக்கால் வாழை ஆராய்ச்சி நிலையம், உய்யக்கொண்டான் திருமலை, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும், மலை வாழை ஆராய்ச்சி நிலையம், மங்களகொம்பு, மதுரை மாவட்டத்திலும், வாழை ஆராய்ச்சி நிலையம் வேலூரிலும் இருக்கின்றன.

* 40 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the acreage in which banana has been cultivated under intensive export scheme in North Arcot district?

திரு. எல். பலராமன் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

வட ஆற்காடு மாவட்டத்தில் தீவிர ஏற்றுமதி திட்டத்திற்கான வாழை எத்தனை ஏக்கர் நிலத்தில் பயிரிடப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : வட ஆற்காடு மாவட்டத்தில் தீவிர ஏற்றுமதித் திட்டத்திற்கான வாழை சுமார் 3,300 ஏக்கர் நிலத்தில் பயிரிடப் பட்டுள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இதற்கு மத்திய அரசாங்கம் என்ன மானியம் வழங்குகிறது ? இந்த அதிகாரிகள் தனிப்பட்ட விவசாயிகளிடம் எவ்வளவு நபர்களிடம் தொடர்பு கொண்டார்கள் என்ற தகவல் அரசுக்கு இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தனியாக அப்படிப் பட்ட உதவிகள் எதுவும் செய்யப்படவில்லை. கூட்டுறவுத் துறை மூலமாக அவர்களுக்குக் கடன் கொடுக்கிற திட்டம் இப்போது வந்திருக்கிறது.

Byracon Medicine

* 41 Q.—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that 'Byracon' medicine used to kill the red-nosed insects which attack the Cocoanut seedlings is not available now;

(*b*) whether the growth of cocoanut trees has been affected thereby; and

(*c*) if so, the action taken thereon?